<u>**அசல் வழக்கு எண். 14/2020**</u>

02.09.2025

**பெயர் – பாலசுப்பிரமணியம்** (DW2)

<u>**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

(1) 29.06.1977 தேதி பாகம் செய்து கொள்வதற்கு முன்பு எனது அப்பா மற்றும் வேலுச்சாமி கவுண்டருக்கு சேர்த்து எவ்வளவு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. பாகம் செய்து கொண்டதில் ஆளுக்கு சுமார் 30–35 ஏக்கர் இருக்கும். எனது அப்பாவிற்கு ஏ செட்யூல் சொத்தாக எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் 40 ஏக்கருக்குள் ஒதுக்கினார்கள். எத்தனை காலைகளில் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் 4–5 காலைகளில் ஒதுக்கப்பட்டது. 497/7, 341, 348, 338/1 ஏ, 338/1 பி காலைகளில் ஒதுக்கப்பட்டது. 497/7 என்பது தான் வழக்குச் சொத்து என்றால் சரிதான். 497/7 தவிர 341, 348, 338/1 ஏ, 338/1 பி காலைகளில் வேலுச்சாமி கவுண்டருக்கும் பொதுவில் சொத்து இருந்ததா என்றால் இல்லை வேலுச்சாமி கவுண்டருக்கு வேறு காலைகளில் இருந்தது. வேலுச்சாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரது வாரிசுகள் 15.11.1977 ம் தேதி பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 497/7 தவிர 341, 348, 338/1 ஏ, 338/1 பி காலைகளில் ஒதுக்கப்பட்டதில் மொத்தம் எத்தனை சொத்து விற்றுள்ளோம் என்றால் எந்த சொத்தும் விற்கவில்லை.

(2) 497/7 காலை பிரிக்கப்படவில்லை என்று வாதியின் மீது உடுமலை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.156/2012 என்ற பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அதன்மேல் மேல் முறையீட்டு வழக்கு எண்.64/2021 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். முதல் மேல் முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இரண்டாவது மேல் முறையீட்டு வழக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் வழக்கு எண் தெரியாது. அந்த வழக்கின் ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) 29.06.1977 ம் தேதி சொத்துக்கள் சரிபாதியாக பிரித்து அவரவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் பொதுவில் சரிபாதி தென்புறம் வாதிக்கு 18.04.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம்

பாத்தியப்பட்டு வாதி அவரது அனுபவத்தில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பொய்யான ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். பொய்யான ஆவணம் என்று நான் சொல்லும் ஆவணத்தில் மேல் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன். தாவாச் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை 1977 ம் ஆண்டு முதல் பிரிந்து வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்தை உரிமையுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை பார்வையிட்டேன்.

(4) தாவாச் சொத்து தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது வரை உட்பிரிவு செய்யப்படவில்லை. 497/7 காலை 497/7 ஏ மற்றும் 497/7 பி என்று ஏற்கனவே உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்றும் உட்பிரிவு செய்யப்பட்டதற்கு நான் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் 497/7 உட்பிரிவு செய்யப்படவில்லை. தாவாச் சொத்து பொதுவான சுவாதீனத்தில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 29.06.1977 எங்கள் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட ஏ செட்யூல் பாக சொத்துக்களை எங்களுக்குள் நிறைய பரிமாற்றங்கள் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது மனைவி. 497/7 காலையில் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். 497/7 காலையில் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதிக்கு அவரது கணவர் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பொதுவில் அனுபவித்து வருகிறோம். எனது மனைவியும், 2ம் பிரதிவாதியும் அவர்களுக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

(5) 497/7 காலையில் மொத்த உள்ள 6.09 ஏக்கர் என்றும் அதில் எங்களுக்கு பாத்தியப்பட்டது 3.04 ½ ஏக்கர் என்றால் சரிதான். பொதுவில் சரிபாதி எங்களுக்கு பாத்தியப்பட்டது. 3.04 ½ ஏக்கருக்கு கூடுதலாக எங்களுக்கு 497/7 காலையில் எந்த பாத்தியமும் இல்லை. 3.04 ½ ஏக்கர் எங்களுக்கு உள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்